‘அவகாசம் தேவை’ என்ற ஆளுங்கட்சியின் வாதத்தை ஏற்க முடியாது!

# தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை கவலையளிப்பதாக உள்ளது!

## நெல்லையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேட்டி!



நெல்லை, ஆக. 20 -

தமிழகத்தில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் கவலையளிப்பதாக உள்ளன. “பிரச்சனைகளைச் சரிசெய்ய 5 ஆண்டுகள் அவகாசம் தேவை” என்ற ஆளுங்கட்சியின் தற்காப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல சட்டம்ஒழுங்கு பராமரிப்பு என்பது தீயணைப்புத் துறை அல்லது அவசரச் சிகிச்சைப் பிரிவு போன்றது அதற்கு அவகாசம் கேட்க முடியாது, உடனடியாகச் செயல்பட வேண்டும். மேலும், காவல்துறை அதிகாரிகள் “ராஜாவை மிஞ்சிய ராஜவிசுவாசிகளாக” செயல்படக் கூடாது என நெல்லையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்தார்.

நெல்லையில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வந்த திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது.

எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் கொள்கை உறுதியோடு, தெளிவோடு நிற்பதே தந்தை பெரியாரின் வழிமுறையாகும். இன்றைய அரசியல் சூழலில் பதவிக்காகக் கட்சி மாறுபவர்கள் பெருகிவரும் வேளையில், கொள்கைப் பிடிப்பு இல்லாத பொதுவாழ்க்கைக்கு எதிராக இளைஞர்களிடம் பெரியார் அவர்களின் கொள்கைகளைக் கொண்டு சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. ஜாதி வெறி, ஜாதி அடையாளம் மற்றும் ஜாதி ஆணவக் கொலைகளுக்கு எதிரான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதே இப்பிரச்சாரத்தின் முக்கிய நோக்கமாகும்.இப்பிரச்சாரக் கூட்டத்திற்கும் இருசக்கர வாகனப் பேரணிக்கும் காவல்துறை முதலில் அனுமதி மறுத்தது. முந்தைய ஆட்சிகளிலும், தற்போதைய ஆட்சியின் தொடக்கத்திலும் இது போன்ற பிரச்சாரங்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், தற்போது திடீரென மறுக்கப்பட்டது குறித்து திராவிடர் கழகம் உயர் நீதி மன்றத்தை நாடியது. கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்க அரசுக்கு உரிமை இல்லை என்றும், குறிப்பிட்ட அமைப்புகளுக்கு மட்டும் இரட்டை அளவுகோல் கடைப்பிடிக்கக் கூடாது என்றும் நீதிமன்றம் காவல்துறையை எச்சரித்ததைத் தொடர்ந்து, அனுமதி பெறுவதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீட் தேர்வை முதன்முதலில் எதிர்த்துப் போராடியது தமிழ்நாடு தான். தற்போது நீட் தேர்வின் தோல்விகளும், அதில் நடந்த ஊழல்களும் இந்தியா முழுவதும் வெளிச்சத்திற்கு வந்து, டெல்லி வரை எதிரொலித்து வருகின்றன. இருப்பினும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க அரசு பிடிவாதமாக இத்தேர்வைத் திணிக்கிறது. முறைகேடுகளுக்குத் தீர்வு காணாமல் அமைச்சரை மட்டும் மாற்றுவது போதாது.

மாநிலத்தில் நடக்கும் ஆணவக் கொலைகள் மற்றும் கூலிப்படை கொலைகள் போன்ற சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகள் கவலையளிப்பதாக உள்ளன. “பிரச்சனைகளைச் சரிசெய்ய 5 ஆண்டுகள் அவகாசம் தேவை” என்ற ஆளுங்கட்சியின் தற்காப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல சட்டம்ஒழுங்கு பராமரிப்பு என்பது தீயணைப்புத் துறை அல்லது அவசரச் சிகிச்சைப் பிரிவு (ICU) போன்றது அதற்கு அவகாசம் கேட்க முடியாது, உடனடியாகச் செயல்பட வேண்டும்.

மேலும், காவல்துறை அதிகாரிகள் “ராஜாவை மிஞ்சிய ராஜவிசுவாசிகளாக” செயல்படக் கூடாது. ஜனநாயகத்தில் கேள்வி கேட்கும் உரிமை எதிர்க்கட்சிகளுக்கும், மக்களுக்கும் உண்டு. மாற்றுக்கருத்துகளைத் தடுப்பது பாசிசமாகும். ஒன்றியத்தில் மக்கள் விரோதத் திட்டங்கள் கொண்டு வரப்படும்போது அதை எதிர்க்கும் உரிமை அனைவருக்கும் உள்ளது. அரசியல் சாசனத்தின்படி பதவியேற்ற அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அதற்கேற்பச் செயல்பட வேண்டும். மேலும், பொருளாதார அடிப்படையில் பிற்படுத் தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு என்ற பெயரில் கொண்டு வரப்பட்டுள்ள கொள்கைகளை விளக்கு வதற்கும், நீட் தேர்வின் பாதிப்புகளைப் பரப்புரை செய்வதற்கும் திராவிடர் கழகம் பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி கூறினார்.

பேட்டியின் போது நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க.பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்.மாலைராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

# கழக வழக்கறிஞர் அணி தீர்மானம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

முதல் பக்கத் தொடர்ச்சி

இச்செயல் போதைப்பொருள் விற்பனைகளுக்கு தைரியத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கும் வகையில் உள்ளது. இதுபோன்ற காவல்துறையின் அலட்சியப் போக்கிற்கு தி.மு.க. சட்டத்துறையின் இக்கூட்டம் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**தீர்மானம் 5:**

தமிழ்நாட்டின் ஆட்சியில் நிர்வாக சீர்கேடு காரணமாக தினம் தோறும் கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள் அதிகரித்து சட்டம் - ஒழுங்கு காப்பாற்ற முடியாத த.வெ.க. அரசுக்கு கடும் கண்டனம்.

கடந்த 2021-26ல் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்ற சம்பவங்களை பெரிது படுத்தி மேடைக்கு மேடை உரக்கக் கத்திய விஜய், இன்னைக்கு ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட கொலைகள், 500க்கும் மேற்பட்ட பாலியல் குற்றங்கள் நடைபெற்று வருகிறது. நான்கு வயது குழந்தைகளுக்கும் ஐந்து வயது பெண் குழந்தைகளுக்கும் கூட பாதுகாப்பு இல்லை. வெடிகுண்டு கலாச்சாரம் கொடிகட்டிப் பறக்கிறது. மொத்தத்தில் த.வெ.க. ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

இதனை சரி செய்ய முதலமைச்சர் விஜய் அவர்களின் காவல் துறை நடவடிக்கை எடுக்காமல் கண்மூடி வேடிக்கை பார்த்து இது போன்ற மக்கள் விரோத செயலை இந்த தி.மு.க. சட்டத்துறை கூட்டம் வன்மையாக கண்டிக்கின்றது.

**EVM செயல்பாடுகள் குறித்து ஐயமும் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடும்.**

**தீர்மானம் 6:**

EVM பரிசோதனைகளின் போது கழக வழக்கறிஞர் அணி தம்மை முழுவதும் ஈடுபடுத்தி செயல்படுவதை அனைவரும் அறிவர். கழகத்தின் பாராட்டினை அது பொறுத்து வழக்கறிஞர் அணி பெற்றுள்ளது. 2021ல் வெற்றி பெற்ற போதும் கூட 2024ல் கழக அமைப்பு செயலாளர் மூலம் WP No. 9578/2024 என்ற வழக்கினை கழகம் தொடர்ந்தது அது நிலுவையில் உள்ளது.

தற்போது கொளத்தூர் தொகுதியில் நடந்த EVM பரிசோதனையின் போது ஏறக்குறைய 30% கருவிகள் சரியாக இயங்கவில்லை, பாதுகாக்கப்படவில்லை என்ற அதிர்ச்சிகரமான உண்மையை நாடறியும். கழகத் தலைவர் அது குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு தேர்தல் ஆணையம் முறையான பதிலளிக்கவில்லை. வெளிப்படைத்தன்மை இல்லாத இந்த முறை மாற வேண்டும்.

EVM அறிமுகப்படுத்திய மேலை நாடுகள் மீண்டும் பேப்பர் பேலட் (Paper Ballot), மீண்டும் காகித முறைக்கே திரும்பி விட்டனர். EVM கருவிகள் இல்லாத காகித முறை வாக்களிப்பு முறை வர வேண்டும். அதுவரை EVM கருவிகள் முறையானதாக, வெளிப்படைத் தன்மை கொண்டதாக மாற்ற வேண்டும். அந்த நிலையை ஒன்றிய அரசும் தேர்தல் ஆணையமும் உடனே கொண்டுவர வேண்டுமென இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இதற்கான சட்டப் போராட்டத்தினை கழக வழக்கறிஞர் அணி மேற்கொண்டு இறுதி வரை போராடும் என தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த அனைத்து தீர்மானங்களையும் ஒருமனதாக தங்களின் பலத்த கரவொலியை எழுப்பி நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

சேலம் நகரில் தனியார் குடிநீர் வழங்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்யவில்லையேல்

# தலைமைச் செயலகம் - கோட்டை முன்பு உண்ணாவிரதம்!

## மேயர் ராமச்சந்திரன் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு!

சேலம், ஆக.20-

சேலம் மாநகராட்சி பகுதிகளில் சூயஸ் என்ற தனியார் நிறுவனம் குடிநீர் வழங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதை ஏற்கெனவே சேலம் மாநகராட்சி மன்ற கூட்டத்தில் தனியாருக்கு சேலம் மாநகராட்சி பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டத்தை ரத்து செய்ய கோரி ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியது.

இந்த நிலையில் மாமன்ற தீர்மானத்தை அரசு மதித்து தனியார் குடிநீர் வழங்கும் திட்டத்தை ரத்து செய்திருக்க வேண்டும்.

ஆனால் ரத்து செய்யாத காரணத்தால் சேலம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் சிறப்பு கூட்டம் மேயர் ஆ.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றதில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் சென்னைக்கு 24ம் தேதி சென்று முதலமைச்சரையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் சந்தித்து சேலம் மாநகராட்சி பகுதிகளுக்கு தனியார் குடிநீர் வழங்கும் உத்திரவை ரத்து செய்ய கோரி கூறுவது ரத்து செய்ய வில்லையானால் கோட்டையில் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளார்கள்.

மாதவரம் தொகுதி வடபெரும்பாக்கம் - ஞாயிறு சாலையில்

# படுபாதாளக்குழிகள் - போக்குவரத்து பாதிப்பு!

## சீரமைக்கக் கோரி பொதுமக்கள் கோரிக்கை!



மாதவரம், ஆக.20-

மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வட பெரும்பாக்கம் முதல் ஞாயிறு வரை உள்ள நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான வி சி என் சாலையில் ஏற்பட்டுள்ள படு பாதாளக் குழிகளால் போக்குவரத்து பாதித்துள்ளது.

வட பெரும்பாக்கம் முதல் செட்டிமேடு விளாங்காடுப்பாக்கம் கண்ணம்பாளையம் பெருங்காவூர் அருமந்தை வழியாக ஞாயிறு செல்லக்கூடிய சாலை வி சி என் சாலை ஆகும் இந்த சாலை பாரம்பரியமிக்க மிக பழைய சாலையாகும்

சென்னை கோயம்பேடு மூலக்கடை பகுதிகளுக்கு மேற்படி பகுதிகளில் இருந்து செல்லும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் தினந்தோறும் விசிஎன் சாலை வழியாக செல்லுகின்றது

இந்த விஷயம் சாலையில் வடபெரும்பாக்கம் செட்டிமேடு பகுதியில் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலை ஆனது மிகவும் சேதம் அடைந்து இரண்டு புறங்களிலும் அதல பாதாள குழிகளாக மாறி காட்சி அளிக்கிறது இதனால் பேருந்து நான்கு சக்கர வாகனங்கள் லாரிகள் இரண்டு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் மழையால் ஏற்பட்டுள்ள சேறு சதவிகளில் மாட்டிக் கொண்டு விபத்துக்கு உள்ளாகிறார்கள்

இது சம்பந்தமாக பல முறை நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் எந்த விதமான நடவடிக்கையும் இல்லாமல் தினந்தோறும் மணி கணக்கில் வாகனங்கள் வரிசை கட்டி நிற்கிறது இதனால் வேலைக்கு செல்கின்ற தாய்மார்களும் பொதுமக்களும் குறிப்பிட்டு நேரத்திற்கு செல்ல முடியாமல் சிரமப்படுகின்றனர்

இது குறித்து தகவல் அறிந்த மாதவரம் வடக்கு பகுதி திமுக செயலாளர் புழல் நாராயணன் நேரில் சென்று மேற்படி சாலையை பார்வையிட்டு அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை தொடர்ந்து இது போன்ற சூழ்நிலை தொடர்ந்தால் பொதுமக்கள் சாலை மறியல் செய்வதாக அறிவித்துள்ளார்கள்

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து வடபெரும்பாக்கம் முதல் ஞாயிறு வரை உள்ள இந்த சாலையை சீரமைத்து தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கிறார்கள். இதில் 17 வது வட்டக் கழகச் செயலாளர் கே.கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

‘மைனாரிட்டி’ த.வெ.க. ஆட்சியில் ‘மனமகிழ் மன்றம்’ எனும் பெயரில் நடைபெறும்

# தனியார் மதுபானக் கடைகளில் பெரும் முறைகேடு!

## சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு!

தேனி, ஆக. 20-

மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் தேனி மாவட்டத்தில் செயல்படும் “மனமகிழ் மன்றம்” என்ற பெயரிலான தனியார் மதுபான கடைகளில் நடைபெறும் விற்பனையில் பெரும் முறைகேடு நடப்பதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**விதி என்ன? நடப்பது என்ன?**

அரசு விதிப்படி “மனமகிழ் மன்றம்” தனியார் மதுபான கடைகளில் உறுப்பினர்கள் மட்டுமே மது பாட்டில்களை வாங்க முடியும். உறுப்பினர் அடையாள அட்டை கட்டாயம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தேனி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மன்றங்களில் இந்த விதி முறையாக பின்பற்றப் படுவதில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

**பெரும் அதிர்சி தரும் கணக்கு**

“மனமகிழ் மன்றத்தில் உண்மையில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர், தினமும் எத்தனை மது பாட்டில்கள் விற்பனை யாகின்றன என கணக்கு பார்த்தால் பெரும் அதிர்ச்சி ஏற்படும்” என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

உறுப்பினர் பட்டியலுக்கும், உண்மையான விற்பனைக்கும் இடையே பெரிய வித்தியாசம் இருப்பதாகவும், உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் மது விற்பனை செய்யப்படுவதாகவும் புகார்கள் வந்துள்ளன.

**கோரிக்கை:**

எனவே மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையினர் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து “மனமகிழ் மன்ற” கடைகளிலும் திடீர் ஆய்வு மேற்கொண்டு, உறுப்பினர் பதிவேடு மற்றும் விற்பனை கணக்குகளை சரிபார்க்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசு விதிகளை மீறி செயல்படும் கடைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விவகாரம் தேனி மாவட்டத்தில் தற்போது பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

நீதிமன்றத்தில் குட்டு வாங்கிவிட்டு அனுமதி அளித்தது த.வெ.க. அரசு!

# திராவிடர் கழகத்தின் மோட்டார் சைக்கிள் பேரணிக்கு அனுமதி!

## சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு காவல்துறை தகவல்!

சென்னை, ஆக. 20 -

நீட் தேர்வுக்கு எதிராக திராவிடர் கழகம் நடத்தவுள்ள மோட்டார் சைக்கிள் பேரணிக்கு அனுமதி வழங்கப்படும் என்று நீதிமன்றத்தில் காவல்துறை தெரிவித்துள்ளது.

நீட் தேர்வுக்கு எதிராக திராவிடர் கழகம் நடத்தவுள்ள மோட்டார் சைக்கிள் பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் தொடர்ந்த இவ்வழக்கு நீதிபதி வி.லட்சுமி நாரயணன் அமர்வு முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, காவல்துறை தரப்பில் ஆஜரான அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஜான் சத்தியன், திருநெல்வேலியில் நடைபெறவுள்ள திராவிடர் கழகத்தின் மாநாட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், மோட்டார் சைக்கிள் பேரணிக்கும் அனுமதி வழங்கப்படும் என்று உறுதி அளித்தார். இதையடுத்து வழக்கு விசாரணையை நீதிபதி நாளைய தினத்துக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

முந்தைய விசாரணையின்போது திராவிடர் கழகத்தின் மாநாட்டுக்கும், மோட்டார் சைக்கிள் பேரணிக்கும் காவல்துறை அனுமதி மறுத்ததற்கு நீதிபதி கடும் கண்டனத்தை பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது.



கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தேசியக் கொடியேற்றி வைத்து, Dengue Prevention League (11,84,259 களன்களை சேகரித்து) போட்டியில் வெற்றி பெற்ற கிழக்கு மண்டலத்திற்கு கோப்பை வழங்கினார். உடன் மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா, துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், துணை ஆணையாளர்கள் த.குமரேசன், ர.சரஸ்வதி, குழுத்தலைவர்கள் வி.ப.முபசீரா நிதிக்குழு, தீபா தளபதி இளங்கோ கணக்குகள் குழு, சோமு (எ) சந்தோஷ் நகரமைப்புக்குழு, மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர் சா.குமார ராஜபாண்டியன், மாநகர நல அலுவலர் மரு. சுபாஷ்காந்தி, உதவி ஆணையர் பிரகாஷ் (நிர்வாகம்), மாமன்ற உறுப்பினர்கள் ஜெயபிரதா தேவி, சித்ரா வெள்ளியங்கிரி, மண்டல சுகாதார அலுவலர் சந்திரன் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஈரோடு வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.வெள்ளிங்கிரி தந்தை சிறுவலூர் ஏ.சண்முகம் மறைவு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் நேரில் அஞ்சலி.ஈரோடு வடக்கு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் தெற்கு ஒன்றியத்திலுள்ள பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.வெள்ளிங்கிரி தந்தை சிறுவலூர் ஏ.சண்முகம் (18.8.2026) செவ்வாய்க்கிழமை அன்று காலை இயற்கை எய்தினார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.மேலும் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக்கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.